Deposition of witness

(Chapter XXIII Code of Criminal Procedure

District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.

CC No. 141/2015

**Deposition of P.W.2**

Name : கனகராஜ்

Father s Name: பழனி

Village : மேலநெம்மக்கோட்டை

Religion : இந்து

Age : 45/2026

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 26.05.2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். )

முதல்விசாரணை

நான் மேலகரும்பிரான்கோட்டையில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன்.எனது தகப்பனார் பழனிக்கு விபத்து ஏற்பட்டதாக கடந்த 19.04.2015 ஆம் தேதி மதியம் எனக்கு தகவல் சொன்னார்கள். நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. கேள்விப்பட்டு தான் சாட்சியம் அளிக்கிறேன்.புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் எதிரி செல்வராஜ் லாரியை வேகமாக ஓட்டி எனது தகப்பனார் இயக்கிய மிதிவண்டி மீது மோதியதாக சொன்னார்கள். எதிரியை நான் பார்த்ததில்லை போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ**.**சா**.**ஆ **1-**ஆக குறியீடு செய்யப்படுகிறது

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் கேள்விப்பட்டது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல எதிரிக்கும் இவ்வழக்கின் விபத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல என தகப்பனார் தான் தனது மிதிவண்டியை சாலை விதிகளை பின்பற்றாமல் எதிர் இயக்கிய வாகனத்தின் மீது குறுக்கே வந்து விழுந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல

<u>மறுவிசாரணை **.**இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்
ஆலங்குடி**(**பொறுப்பு**)**